## சுருக்கம்

வேளாண்மை-உழவர் நலன் – வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2023-24 - பல்வேறு அறிவிப்புகள் - மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் 2023-24 ன்கீழ் செயல்படுத்த ரூ.3063.523 இலட்சம் மற்றும் உயர்மதிப்பு திட்ட இனங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு, கூடுதல் 20% மானியமாக வழங்க ரூ.6.13 இலட்சம் நிதி ஒப்பளிப்பு - வழங்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

### வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை

அரசாணை (நிலை) எண்.91

நாள்: 16.05.2023.
திருவள்ளுவர் ஆண்டு 2054,
சோபகிருது-வைகாசி 2-ஆம் நாள்
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.113, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 31.05.2022.
2. அரசாணை (நிலை) எண்.262, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 04.11.2022.
3. 2023-24 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை 21.03.2023 மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.
4. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கடித எண்.மா.தி.2/4000/2023, நாள் 24.04.2023.

*******

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2022-2023 ஆம் நிதி ஆண்டில் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திடவும், 2022-23 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் சிலவற்றை செயல்படுத்திடவும் ரூ.27.50 கோடி நிதி ஒப்பளிப்பும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்தின் கீழ் வீடுகளில் மூலிகைத் தோட்டங்கள் அமைப்பதற்கு ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பும் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 21.03.2023 அன்று நடைபெற்ற 2023-24 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட

[த.பி.பா]

அறிவிப்புகளுள் பின்வரும் அறிவிப்புகள் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளன:-

**வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2023-24**

| அறிவிப்பு எண் | அறிவிப்புகள் |
|---|---|
| 7 | **ஆதிதிராவிட, பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்குக் கூடுதலாக 20 சதவீத மானியம்**<br>வரும் நிதியாண்டில், ஆதிதிராவிட சிறு, குறு விவசாயிகளுக்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலும், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலும், ஆக மொத்தம் 11 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டு இயந்திரங்கள், சூரிய சக்தி பம்புசெட்டுகள், சூரிய சக்தி உலர்த்திகள், குளிர் சாதனக் கிடங்குகள், ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில், நிழல்வலைக்குடில் போன்ற உயர்மதிப்பு இனங்களுக்கு 20 சதவீத கூடுதல் மானியம் வழங்கப்படும். |
| 15 | **பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு**<br>"பழங்குடியின மக்களின் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்காகவும், அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கவும், காய்கறி நாற்றுகள், விதைகள் அடங்கிய வீட்டுத்தோட்டத் தளைகள் 5,000 குடும்பங்களுக்கு வழங்க 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்". |
| 20 | **அ. மதுரை மல்லிகைக்கு ஓர் இயக்கம்**<br>"மதுரை, விருதுநகர், திண்டுக்கல், தேனி, தென்காசி மாவட்டங்களில் மல்லிகை உற்பத்தியை மேம்படுத்துவதோடு, சந்தை வாய்ப்புகளும் மேம்படுத்தப்படும். குறிப்பாக, பருவமில்லா காலங்களில் உற்பத்தி உறுதி செய்யப்படும். இத்திட்டம் தொடர் திட்டமாக ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படும். ஆண்டு முழுவதும் மல்லிகைப் பூக்கள் கிடைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் இத்திட்டம் ரூ.7 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்".<br>**இ. மிளகாய் மண்டலம்.**<br>இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி மாவட்டங்களில் மிளகாய் பரப்பை 40,000 எக்டராக உயர்த்தி, உற்பத்தியினை அதிகரிக்க இம்மாவட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, 5 ஆண்டுகளில் மிளகாய் மண்டலமாக மாற்றப்படும். இப்பகுதியில் மிளகாய் உற்பத்தியை அதிகரிக்கவும், சேமித்து வைத்து சந்தைப்படுத்தவும், மதிப்புக்கூட்டுதலுக்கும் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். நீர் ஆதாரம் இல்லாத இடங்களில் பண்ணைக் குட்டைகள் ஏற்படுத்தப்பட்டு நுண்ணீர்ப் பாசன முறையில் சாகுபடி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டு, இம்மாவட்டங்களில் 1,000 எக்டரில் சீமைக்கருவேல மரங்கள், ஊரக வளர்ச்சித் துறை, வேளாண் பொறியியல் துறையுடன் ஒருங்கிணைந்து அகற்றப்பட்டு, மிளகாய் சாகுபடி செய்யப்படும். |

[த.பி.பா]

| | |
|---|---|
| | மேலும், 1,000 எக்டர் சாகுபடிக்கான விதைகள், நாற்றுகள், இடுபொருட்கள் வழங்குவதோடு, மிளகாய்த்தூள், மிளகாய் பேஸ்ட் (Chilli paste), மிளகாய் துகள்கள் (Chilli flakes) மிளகாய் எண்ணெய் (Chilli oil) போன்ற மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரிக்க ஏதுவாக பதப்படுத்துதலும், மதிப்புகூட்டுதலும் செய்யும் கூடங்கள், சூரிய உலர்த்திக் கூடம், தூய்மையான முறையில் காய வைத்து சந்தைப்படுத்திட உலர்பாய் வழங்கப்படும். இத்திட்டம் வரும் ஆண்டில் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.<br>ஈ. கறிவேப்பிலைத் தொகுப்பு<br>கோயம்புத்தூர் மாவட்டத்தில் கறிவேப்பிலைக்கு என ஒரு தொகுப்பு ஏற்படுத்தப்படும். 5 ஆண்டுகளில் 1,500 எக்டர் பரப்பில் கறிவேப்பிலைத் தொகுப்புத் திட்டம் வரும் ஆண்டில் ரூ.2.5 கோடி நிதியில் செயல்படுத்தப்படும். |
| 22 | தக்காளி வெங்காயம் சீராகக் கிடைக்கச் செய்தல்<br>பெரம்பலூர், நாமக்கல், சேலம், தூத்துக்குடி, திருச்சி, திண்டுக்கல், திருப்பூர் போன்ற மாவட்டங்களில் விதைப்பு இயந்திரங்கள், சேமிப்புக் கட்டமைப்புகள், அறுவடை இயந்திரங்கள், வெங்காயத்தாள் பிரித்தெடுக்கும் கருவிகள் ஆகிய உதவிகள் வழங்க ரூ.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வெங்காய வரத்து நிலைப்படுத்தப்படும்.<br>ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக தக்காளி, வெங்காயம் கிடைக்கும் வகையில் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திண்டுக்கல், தேனி, திருப்பூர், கோவை ஆகிய மாவட்டங்களில் 19 கோடி ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும். |
| 26 | பத்து இலட்சம் குடும்பங்களுக்கு பழச் செடிகள் விநியோகம்<br>"வரும் ஆண்டில், பத்து இலட்சம் குடும்பங்களுக்கு மா, கொய்யா, பலா, நெல்லி, எலுமிச்சை, சீதாப்பழம் போன்ற பல்லாண்டு பழச் செடிகள் அடங்கிய தொகுப்பு ரூ.15 கோடி நிதியில் வழங்கப்படும்." |
| 27 | பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறையைப் பரவலாக்கல்<br>"பசுமைக் குடில், நிழல் வலைக் குடிலுக்கு மானியம் அளிக்கும் வகையில், வரும் ஆண்டில் ரூ.22 கோடி ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திண்டுக்கல், தருமபுரி, ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தேனி, ஈரோடு, திருப்பத்தூர், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்." |
| 30 | பாரம்பரிய காய்கறிகள்<br>"பாரம்பரிய காய்கறி விதைகள் சேகரிக்கப்பட்டு, மரபணு தோட்டங்கள் அமைக்கப்படும். மாவட்டந்தோறும் விதைத் திருவிழா, மாநில அளவில் கருத்தரங்கம், பாரம்பரிய காய்கறி விதைகளை அதிகளவில் மீட்டெடுத்த விவசாயிகளுக்கு பரிசுத்தொகை வழங்கப்படுவதோடு, மீட்டெடுத்த விதைகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விதைப் பொட்டலங்களாக ஆடி, தை பட்டங்களில் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் |

[த.பி.பா]

| | |
|---|---|
| | விநியோகம் செய்யப்படும். வரும் ஆண்டு அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் ரூ.1.5 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்". |

3. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், 2023-24 ஆம் ஆண்டு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திடவும் அதில், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 21.03.2023 அன்று நடைபெற்ற வேளாண்மை நிதிநிலை அறிக்கையின்போது சட்ட மன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளுள் சிலவற்றை செயல்படுத்திடவும் ரூ.3271.023 இலட்சம் (ரூபாய் முப்பத்தி இரண்டு கோடியே எழுபத்தியொரு இலட்சத்து இரண்டாயிரத்து முந்நூறு மட்டும்) நிதி ஒதுக்கீடும் மேலும், அறிவிப்பு எண் 7-ன்படி, ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு, உயர் மதிப்பு தோட்டக்கலைத் திட்ட இனங்களான நிழல்வலைக்குடில் (3,000 ச.மீ) மற்றும் பசுமைக்குடிலுக்கு (1000 ச.மீ) 20% கூடுதல் நிதியாக ரூ.6.13 இலட்சம் வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தோட்டக்கலை மற்றும் மலைப்பபயிர்கள் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2023-2024 ஆம் நிதி ஆண்டில் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தினை இணைப்பு- I-ல் கண்டுள்ளவாறு திட்ட இனங்களை செயல்படுத்திடவும், அதில் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 21.03.2023 அன்று நடைபெற்ற வேளாண்மை நிதிநிலை அறிக்கையின் போது சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளுள் மேலே பத்தி-2ல் காணும் அறிவிப்புகளை செயல்படுத்திடவும் ரூ.3063.523 இலட்சம் (ரூபாய் முப்பது கோடியே அறுபத்தி மூன்று இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து முந்நூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பும் மேலும், அறிவிப்பு எண் 7-ன்படி, ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு, உயர் மதிப்பு தோட்டக்கலைத் திட்ட இனங்களான நிழல்வலைக்குடில் (3,000 ச. மீ) மற்றும் பசுமைக்குடிலுக்கு (1000 ச.மீ) 20% கூடுதல் நிதியாக ரூ.6.13 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சத்து பதிமூன்றாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது. இத்திட்டத்திற்கான செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வாணையுடன் இணைப்பு II-ஆக சேர்க்கப்பட்டுள்ளது.

5. மேலே பத்தி-4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | கணக்கு தலைப்பு | நிதி |
|---|---|---|
| 1 | 2401 – 00 - பயிர்வளர்ப்பு – 119 தோட்டக்கலையும் காய்கறி பயிர்வளர்ப்பும் – மாநில செலவினங்கள் – BJ – மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் – 311 - மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம்.<br>2401-00-119-BJ-311-01 | 2453.868 |

[த.பி.பா]

| | | |
|---|---|---|
| 2 | 2401 – 00 - பயிர்வளர்ப்பு – 789 – ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – மாநில செலவினங்கள் – AM – மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் – 311 - மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம்.<br>**2401-00-789-AM-311-01** | 579.172 |
| 3 | 2401 – 00 - பயிர் வளர்ப்பு – 796 - பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் – மாநில செலவினங்கள் – AG- மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் – 311 – மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம்.<br>**2401-00-796-AG-31101** | 30.483 |
| **மொத்தம்** | | **3063.523** |
| 4 | 2401 – 00 - பயிர்வளர்ப்பு – 789 – ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – மாநில செலவினங்கள் – AF – சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கூடுதல் மானியம் - 311 - மானியங்கள் – 01 – தனித்திட்ட மானியம்.<br>**2401-00-789-AF-31101** | 5.42 |
| 5 | 2401 – 00 - பயிர் வளர்ப்பு – 796 - பழங்குடியினர் பகுதித் துணைத்திட்டம் – மாநில செலவினங்கள் – JO சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கூடுதல் மானியம் – 311 – மானியங்கள் – 01 – தனித்திட்ட மானியம்.<br>**2401-00-796- JO -31101** | 0.71 |
| **மொத்தம்** | | **6.13** |

6. மேலே பத்தி-4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், அவர் இத்திட்டத்திற்கு உரிய வழிகாட்டுதல்களை தவறாமல் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் 15.05.2023-ம் நாளிட்ட அ.சா.எண். 18452/ நிதி (வே-உ.ந)/2023, இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
முதன்மை கணக்காயர் (G&SSA/E&RSA). சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
கருவூல கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

[த.பி.பா]

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் தனிச் செயலர், வேளாண்மை - உழவர் நலத்துறை, சென்னை - 9.

நிதித் (வே.உ.ந.) துறை, சென்னை-9.

வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.1/வே.உ.5/அநமு.3/வ&தி), சென்னை-9.

உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை-9.

சம்பந்தப்பட்ட கோப்பு எண்.1283/தோ.க.2/2023.

இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

16/05/2023

**பிரிவு அலுவலர்**

[த.பி.பா]

## இணைப்பு - I

அரசாணை (நிலை) எண்.91, வேளாண்மை – உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள்: 16.05.2023

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மானிய சதவீதம் | செயல்திட்டம் 2023-24 | |
|---|---|---|---|---|
| | | | பொருள் இலக்கு | நிதி இலக்கு |
| I | தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் (எக்டர்) (அறிவிப்புஎண். 22 – வெங்காயம், தக்காளி) | 40% | 7,563 | 1345.773 |
| II | உயர் தொழில்நுட்ப முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை ஊக்குவித்தல் | | | |
| 1 | ஹைட்ரோபோனிக்ஸ்&செங்குத்து தோட்டம் அமைத்தல் (அலகு) | 50% | 500 | 75.000 |
| 2 | பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் வளர்ப்பு (அறிவிப்புஎண். 27) | | | |
| i. | பசுமைகுடில் (சதுரமீட்டர்) | 50% | 6,000 | 28.050 |
| | கூடுதல்20 சதவீதமானியம் (ஆதிதிராவிட, பழங்குடியின சிறு, குறு விவசாயிகள்) (அறிவிப்பு எண்.7) | 20% | | 1.870 |
| ii. | நிழல்வலைக்குடில் (சதுரமீட்டர்) | 50% | 16,000 | 56.800 |
| | கூடுதல் 20 சதவீதமானியம் (ஆதிதிராவிட, பழங்குடியின சிறு, குறு விவசாயிகள் (அறிவிப்பு எண்.7) | 20% | | 4.260 |
| | மொத்தம் | | | 165.980 |
| III | வீட்டுத் தோட்டம் அமைப்பதை ஊக்குவித்தல் | | | |
| 1 | மாடித் தோட்டத்தளைகள் விநியோகம் (எண்கள்) (அறிவிப்புஎண். 15) | 50% | 25,000 | 112.500 |
| 2 | பழச்செடி தொகுப்புகள் விநியோகம் (எண்கள்) (அறிவிப்புஎண். 26) | 75% | 2,50,000 | 375.000 |
| | மொத்தம் | | | 487.500 |
| IV | தேவை அடிப்படையிலான திட்ட இனங்கள் | | | |
| 1 | வாழை / மரவள்ளியில் காய்கறிகள் ஊடுபயிர் சாகுபடி (எக்டர்) | | 2,000 | 200.000 |
| 2 | பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களில் காய்கறிகள் ஊடுபயிர் சாகுபடி (எக்டர்) | | 4,000 | 400.000 |
| 3 | வெற்றிலையில் ஒருங்கிணைந்த உர மற்றும் பயிர்பாதுகாப்பு மேலாண்மை (எக்டர்) | | 300 | 30.000 |

[த.பி.பா]

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | விளை பொருட்களை பாதுகாப்பாக கையாள நெகிழிக் கூடைகள் வழங்குதல் (எண்கள்) (அறிவிப்புஎண். 22 – தக்காளி) | 40% | 2,500 | 75.000 |
| 5 | குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிடங்கு அமைத்தல் (மெட்ரிக்டன்) (அறிவிப்புஎண். 22 - வெங்காயம்) | 50% | 2,500 | 87.500 |
| | **மொத்தம்** | | | **792.500** |
| **V** | **கூடுதல் வருமானம் ஈட்டும் செயல்பாடுகள்** | | | |
| 1 | காளான் வளர்ப்பு கூடம் அமைத்தல் (எண்கள்) | 50% | 250 | 125.000 |
| | **மொத்தம்** | | | **125.000** |
| **VI** | **அரசு கல்வி நிலையங்கள் மற்றும் ஆதரவற்றோர் காப்பகங்களில் தோட்டம் அமைத்தல் (எண்கள்)** | 100% | 300 | 24.000 |
| **VII** | **தொகுப்பு முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கான இயக்கம்** (அறிவிப்புஎண். 20) | | | |
| 1 | **கறிவேப்பிலைத் தொகுப்பு**(அறிவிப்புஎண். 20 ஈ) | | | |
| i. | கறிவேப்பிலையில் இரசாயன எச்சம் பரிசோதித்தல் (எண்கள்) | 100% | 150 | 7.500 |
| | **மொத்தம்** | | | **7.500** |
| 2 | **மல்லிகைத் தொகுப்பு**(அறிவிப்புஎண். 20 அ) | | | |
| i. | சந்தைக்கு கொண்டு செல்ல குளிர்ப் பெட்டிகள் வழங்குதல் (எண்கள்) | 40% | 1,000 | 20.000 |
| ii. | விவசாயிகள் வயலில் செயல் விளக்கத்திடல் அமைத்தல் –0.5 ஏக்கர் (விருதுநகர்) (எண்கள்) | 75% | 3 | 4.950 |
| iii. | அரசு தோட்டக்கலைப் பண்ணையில் செயல்விளக்கத்திடல் அமைத்தல்- பொது – 1 எக்டர் (விருதுநகர்) (எண்கள்) | 100% | 1 | 10.000 |
| | **மொத்தம்** | | | **34.950** |
| 3 | **மிளகாய் மண்டலம்** (அறிவிப்புஎண். 20 இ) | | | |
| i. | வேலிக் கருவேலமரங்களை அகற்றுதல் (எக்டர்) | 50% | 400 | 20.000 |
| ii. | உலர்பாய்கள் (எண்கள்) | 50% | 500 | 15.000 |
| iii. | விவசாயிகள் வயலில் செயல் விளக்கத்திடல் அமைத்தல் –1 ஏக்கர் (தூத்துக்குடி&விருதுநகர்) (எண்கள்) | 75% | 5 | 8.700 |
| | **மொத்தம்** | | | **43.700** |

[த.பி.பா]

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | முருங்கை தொகுப்பு | | | |
| i. | அங்கக வேளாண்மை – முதலாமாண்டு (50%மானியத்தில் 40%) | 50% | 250 | 10.000 |
| ii. | அங்ககசான்றிதழ் பெறுவதற்கான தொகை - முதலாமாண்டு (30%மானியம்) | 100% | 250 | 7.500 |
| iii. | சிப்பம் கட்டும் அறை (600 ச.அடி) (கரூர் & தூத்துக்குடி) (எண்கள்) | 50% | 5 | 10.000 |
| | **மொத்தம்** | | | **27.500** |
| | **தொகுப்புக்கான மொத்தம்** | | | **113.650** |
| VIII | **விருதுகள் வழங்குதல்** | | | |
| 1 | பாரம்பரிய காய்கறிகள் சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு விருது வழங்குதல் (மாவட்டஅளவில்) (அறிவிப்பு எண். 30) | 100% | 37 | 9.250 |
| 2 | அங்கக வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிக்கான விருது வழங்குதல் (மாநில அளவில்) | 100% | 3 | 2.000 |
| | **மொத்தம்** | | | **11.250** |
| XI | **திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல்** | | | **4.000** |
| | **ஆகமொத்தம்** | | | **3069.653** |

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**/உண்மை நகல்/**

(கையொப்பம்) 16/05/2023
**பிரிவு அலுவலர்**

[த.பி.பா]

## இணைப்பு - II

**அரசாணை (நிலை) எண். 91, வேளாண்மை-உழவர் நலத்(தோ.க.2) துறை, நாள்: 16.05.2023**
**மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள்**

**I. பொதுவான வழிகாட்டுதல்கள்**

1. பயனாளிகள் தேர்வு இணையவழி மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும். (https://www.tnhorticulture.tn.gov.in)
2. திட்ட இலக்குகளை மாவட்டத்திற்குத் தெரியப்படுத்திய உடன் அனைத்து வட்டாரங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
3. திட்ட இனங்களைச் செயல்படுத்துவதில் மாவட்ட தோட்டக்கலை இணை/துணை இயக்குநர் முக்கிய பங்கு வகிப்பதுடன் சரியான வழிகாட்டுதல்களை வட்டாரங்களுக்கு வழங்கிட வேண்டும்.
4. வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநரே திட்ட இனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் விவரங்களை சரிபார்த்து அங்கீகரிக்கும் அதிகாரம் உடையவராவார்.
5. பயனாளிகள் / விவசாயிகளின் வகை, பாலினம் மற்றும் திட்டத்திற்கான தகுதி ஆகியவற்றை உதவி தோட்டக்கலை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர் கண்டறிந்து பயனாளி / விவசாயிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
6. திட்ட பலனைப் பெற, தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு சொந்த நிலம்/குத்தகை நிலம் (10 வருட பதிவு செய்யப்பட்ட குத்தகை) இருக்க வேண்டும்.
7. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கான பணப்பரிவர்த்தனை, மின்னணு தீர்வை (ECS) மூலமாகவோ அல்லது DBT மூலமாகவோ வழங்குவதற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கி / கூட்டுறவு வங்கி ஆகிய ஏதேனும் ஒன்றில் அவர் கணக்கு வைத்திருக்க வேண்டும்.
8. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி, இந்திய அரசின் UIDAI (இந்திய தனிப்பட்ட அடையாள ஆணைய அமைப்பு) திட்டத்தில் பதிவு செய்தவராக இருத்தல் வேண்டும். மேலும், அவரது வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
9. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி திட்டத்தில் பயன்பெற திட்ட இனங்களுக்கு ஏற்றவாறு ஆதார் அட்டை, குடும்ப அட்டை, பட்டா/சிட்டா, அடங்கல், நில வரைபடம், வங்கி கணக்கு புத்தகம், மண் மற்றும் நீர் பரிசோதனை அறிக்கை (பசுமைக்குடில் மற்றும் நிழல்வலைக்குடிலுக்கு மட்டும்) ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

[த.பி.பா]

10. திட்டம் சார்ந்த செயலாக்கத்திற்கு முன், முந்தைய ஆண்டுகளில் பயனடைந்த விவசாயியை மீண்டும் தேர்வு செய்வதை தவிர்த்து, சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும்.

11. உயர் மதிப்பு திட்டங்களான பசுமைக்குடில், நிழல்வலைக்குடில், காளான் வளர்ப்பு கூடம், குறைந்த விலை வெங்காய சேமிப்பு கிடங்கு, சிப்பம் கட்டும் அறை போன்ற இனங்களில் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, உச்சபட்ச மானியம் பெற்ற விவசாயிகள் அடுத்த 7 ஆண்டுகள் வரை பயன் பெற இயலாது. மேலும், பரப்பு விரிவாக்கம் திட்ட இனத்தின் கீழ் மானியம் பெறும் விவசாயிகள் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் வரை பயன்பெறுவதை தவிர்க்க வேண்டும்.

12. உயர் மதிப்பு திட்டங்களான பசுமைக்குடில், நிழல்வலைக்குடில், காளான் வளர்ப்பு கூடம் மற்றும் குறைந்த விலை வெங்காய சேமிப்பு கிடங்கு போன்றவை அனைத்தும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் – தேசிய தோட்டக்கலை இயக்க நெறிமுறைகள் மற்றும் தரநிலைகளைப் பின்பற்றி அமைக்க வேண்டும்.

13. விவசாயிகள் அனைத்து திட்ட வழிகாட்டுதல்களையும் பின்பற்றியுள்ளதை வட்டார அலுவலர்கள் உறுதி செய்த பிறகே DBT முறையில் பயனாளிக்கு மானியம் விடுவிக்கப்பட வேண்டும். (பிற வகையிலான பரிவர்த்தனையைத் தவிர்க்க வேண்டும்)

14. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி குறிப்பிட்ட காலத்திற்குள், பணியாணையில் குறிப்பிட்டவாறு, பணியினை மேற்கொள்ளவில்லை என்றால், சம்பந்தப்பட்ட பயனாளிக்கு வழங்கிய ஆணையினை ரத்து செய்து, முன்னுரிமை அடிப்படையில் புதிய பயனாளியை உரிய காலத்திற்குள் தேர்வு செய்ய வேண்டும்.

15. நடவுப் பொருட்கள் அனைத்தும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் மூலம் பெறப்பட வேண்டும். அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி குறைவாகவோ அல்லது இருப்பு இல்லை என்றாலோ, பிற அரசு பண்ணைகள் / வேளாண் பல்கலைக்கழகங்கள் / வேளாண் அறிவியல் நிலையங்களிலிருந்து பெறப்பட வேண்டும்.

16. விவசாயிகளுக்கு திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நடவுப் பொருட்கள் அனைத்தும் இணையவழி (Online Billing) மூலம் அன்றைய தினமே பட்டியலிடப்பட வேண்டும்.

17. உயிரி இடுபொருட்கள்/இயற்கை உரங்கள்/இரசாயன உரங்கள் போன்றவை அரசிடமிருந்தோ/தனியார் நிறுவனத்திலிருந்தோ கொள்முதல் செய்யும் பட்சத்தில் உரிய ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளைப் பின்பற்றி கொள்முதல் செய்ய வேண்டும்.

18. இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற விதைகள்/உயிரி இடுபொருட்கள்/இயற்கை உரங்கள்/இரசாயன உரங்கள் போன்றவற்றின்

தரத்தினை உறுதி செய்த பின்னரே விநியோகம் செய்வதை மாவட்ட அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும்.

19. AHO/ DyHO/ HO/ ADH ஆகியோர் தங்கள் பகுதியில் திட்டங்கள் அனைத்தும் சரியாக செயல்படுவதை உறுதி செய்ய, பல்வேறு நிலைகளில் கள ஆய்வினை முறையாக மேற்கொள்ள வேண்டும்.

20. திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முன், செயல்படுத்தும் போது மற்றும் செயல்படுத்திய பின் என பல்வேறு நிலைகளில் அனைத்து இனங்களுக்கும் ஒரே கோணத்தில் இருந்து புவியிடக் குறியீடுடன் கூடிய (Geotagged) கள புகைப்படங்கள் வட்டார அலுவலர்களால் எடுக்கப்பட வேண்டும்.

21. வட்டார அலுவலர்கள் விவசாயி சமர்ப்பித்த திட்ட இனங்களின் பட்டியல்களை சரிபார்த்து, ஆய்வு மேற்கொண்டு அனைத்தும் சரியாக இருப்பதை உறுதி செய்தபின்பே பக்க பதிவுடன் சான்றளிக்க வேண்டும்.

22. ஒவ்வொரு இனத்திற்கும் தொடர் நடவடிக்கை பதிவேடு பராமரிக்கப்பட்டு, அனைத்து விவரங்களும் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

23. மொத்த நிதியில் பொது பிரிவு விவசாயிகளுக்கு/பயனாளிகளுக்கு 80 சதவீதமும், ஆதி திராவிட விவசாயிகளுக்கு/பயனாளிகளுக்கு 19 சதவீதமும் பழங்குடியின விவசாயிகளுக்கு/பயனாளிகளுக்கு 1 சதவீதமும் மற்றும் பெண் விவசாயிகளுக்கு மொத்த ஒதுக்கீட்டில் 30 சதவீதம் என திட்ட இனங்கள் வழங்கப்பட வேண்டும்.

24. உயர் மதிப்பு திட்டங்களான பசுமைக்குடில் மற்றும் நிழல்வலைக்குடில் இனத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு திட்ட இலக்குக்கு ஏற்றவாறு கூடுதலாக 20 சதவீத மானியம் வழங்கப்பட வேண்டும்.

25. உயர் தொழில்நுட்ப முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி (பசுமைக்குடில் மற்றும் நிழல்வலைக்குடில்) இனம் தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படாத மாவட்டங்களான காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், திருவாரூர், நாகப்பட்டினம், விருதுநகர், மயிலாடுதுறை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்படவேண்டும்.

26. தேசிய தோட்டக்கலை இயக்க விதிமுறைகளின்படி, பசுமைக்குடில், நிழல்வலைக்குடில் குறைந்த விலை வெங்காய சேமிப்பு கிடங்கு, காளான் வளர்ப்புக் கூடம், வெற்றிலை பரப்பு விரிவாக்கம், ஹைட்ரோபோனிக்ஸ் மற்றும் செங்குத்துதோட்டம் போன்ற இனங்களுக்கான இடுபொருட்களின் அளவு மற்றும் தரத்தை உறுதிசெய்தபின் அதற்கான பின்னேற்பு மானியம் விடுவிக்கப்பட வேண்டும்.

27. கூட்டு ஆய்வுக் குழுவின் தலைவர் சம்பந்தப்பட்ட மாவட்ட தோட்டக்கலை இணை/துணை இயக்குநர் ஆவார். அக்குழுவில் வேளாண்

[த.பி.பா]

பல்கலைக்கழக நிபுணர் (அ) வேளாண் அறிவியல் நிலைய நிபுணர், வேளாண் பொறியியல் துறையின் உதவி/ இளநிலை பொறியாளர் மற்றும் சம்மந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆகியோர் இடம் பெறுவர். உட்கட்டமைப்புகள் அனைத்தும் அரசு தர நிலையின் படி சரியாக உள்ளதா என்பதை கூட்டாய்வு குழு உறுதி செய்த பின்னரே நிதி விடுவிக்கப்பட வேண்டும்.

28. கூட்டு ஆய்வு குழுவிடமிருந்து திருப்திகரமான அறிக்கையைப் பெற்ற பின்னரே விவசாயிகளுக்கு நிதி பின்னேற்பு மானியமாக விடுவிக்கப்பட வேண்டும். வங்கியில் கடன் பெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரி கூட்டாய்வில் இடம்பெற்று சான்றளிக்க வேண்டும்.

II. திட்ட வழிகாட்டுதல்கள்:

திட்ட வாரியான குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் பின்வருமாறு.

1. <u>தோட்டக்கலைப்பயிர்களின் பரப்பு விரிவாக்கம் – ரூ.1345.773 இலட்சம்</u>

i. <u>பழப்பயிர்களின் பரப்பு விரிவாக்கம் ரூ. 123.173 இலட்சம்</u>

- பயிர்கள்: எலுமிச்சை, மா, கொய்யா மற்றும் நெல்லி
- முதலாண்டிற்கான 60 சதவீத மானியத் தொகை (நடவுப்பொருள் மற்றும் இடுபொருட்களுக்காக) மட்டும் வழங்கப்படும்.
- நடவுச்செடிகள் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்து வழங்கப்படும்.
- நடவுச்செடிகள் செலவினம் போக மீதமுள்ள தொகை ஒருங்கிணைந்த உர/பூச்சி மேலாண்மைக்கான இடுபொருட்களுக்கு வழங்கப்படும்.
- ஒரு விவசாயி அதிகபட்சமாக 4 எக்டர் வரை பயன்பெறலாம்.

| வ. எண் | பழப்பயிர் | இடைவெளி | மொத்த செலவினம் / எக்டர் (ரூ) | மானியத் தொகை/எக்டர் (ரூ) |
|---|---|---|---|---|
| 1- | எலுமிச்சை | 4மீ X 4.5மீ | 54,980 | 13,195 |
| 2. | மா | 10 மீ x 10 மீ | 25,500 | 6,120 |
| 3. | கொய்யா | 6 மீ x 6 மீ | 38,340 | 9,201 |
| 4. | நெல்லி | 6 மீ x 6 மீ | 40,008 | 9,601 |

ii. <u>காய்கறிப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் ரூ.1126.60 இலட்சம்</u>

- பயிர்கள்: வெங்காயம், முருங்கை, கத்தரி, தக்காளி, மிளகாய், மரவள்ளி போன்ற பயிர்கள்.

- குழித்தட்டு நாற்றுகள் அரசு தோட்டக்கலை பண்ணைகளிலிருந்தும், விதைகள் மாவட்ட அலுவலர்களால் கொள்முதல் செய்தும் வழங்கப்படும்.
- மொத்த செலவு - ரூ.50,000/ எக்டர், 40 சதவீத மானியம் - ரூ.20,000/எக்டர்
- நடவுப்பொருட்கள் செலவினம் போக மீதமுள்ள தொகை ஒருங்கிணைந்த உர/பூச்சி மேலாண்மைக்கான இடுபொருட்களுக்கு வழங்கப்படும்.
- ஒரு விவசாயி அதிபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.

iii. <u>மலர் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் (உதிரி மலர்கள்) ரூ. 96.00 இலட்சம்</u>

- **பயிர்கள்:** மல்லிகை, கனகாம்பரம், செண்டுமல்லி, சாமந்தி, ரோஜா, வெட்சி மலர் போன்ற மலர்கள்.
- மொத்த செலவினம் - ரூ.40,000/எக்டர், சிறு/குறு விவசாயிகளுக்கு 40 சதவீத மானியம் - ரூ.16,000/ எக்டர், இதர விவசாயிகளுக்கு 25 சதவீத மானியம் - ரூ.10,000/ எக்டர்
- ஒரு விவசாயி அதிபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.

**2. <u>உயர் தொழில்நுட்ப முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி - ரூ. 165.98 இலட்சம்</u>**

**<u>அ) ஹைட்ரோபோனிக்ஸ் மற்றும் செங்குத்து தோட்டம் - ரூ. 75.00 இலட்சம்</u>**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்** – அனைத்து மாவட்டங்கள்
- மொத்த விலை – ரூ. 30,000/அலகு (GST மற்றும் போக்குவரத்து செலவினம் உட்பட), 50 சதவீத மானியம் – ரூ. 15,000/அலகு பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.
- ஒரு பயனாளிக்கு 1 அலகு மட்டுமே வழங்கப்படும்.
- திட்ட ஆவணங்கள்: ஏதேனும் ஒன்று (அடையாள அட்டை/ முகவரி ஆதாரம்/ ஆதார் அட்டை) மற்றும் பயனாளியின் புகைப்படம்

**ஹைட்ரோபோனிக்ஸ் அமைப்பதற்கான வரையறைகள் (Specifications):**

ஹைட்ரோபோனிக்ஸ் அமைப்பின் அளவு – 40 ச.அடி ( ஒரு சதுர அடிக்கு ரூ.750 வீதம் )

| வ. எண் | பொருள் | விவரக் குறிப்பு | அளவு | விலை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1. | NFT தடங்கள் (NFT Channel) | யு.பி.வி.சி, 100*50 மி.மீ, 32 அடி, மூடிய மற்றும் திறந்த விளிம்பு மூடி | - | 8500 |
| 2. | தாங்கும் அமைப்பு | துருப்பிடிக்காத எஃகு (Stainless Steel, Dismantle, Easy to assemble) 4*2 அடி, 1 அங்குலம் விட்டம். | - | 7000 |
| 3. | குழாய் இணைப்புகள் | யு.பி.வி.சி, 1 அங்குலம் விட்டம், T & L bend, inlets & outlets | - | 1500 |

[த.பி.பா]

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | மோட்டார் | 40 வாட் நீரில் மூழ்கிய மோட்டார் | 1 | 2500 |
| 5. | பெர்லைட் கலவை | < 0.5 மின்கடத்து திறன், பெர்லைட் கலவை | 1 | 4000 |
| 6. | ஊட்டச்சத்து | மூன்று மாதத்திற்கான ஊட்டச்சத்து | 2 | 2250 |
| 7. | வலை அமைப்பிலான தொட்டி (Net pots) | 2 அங்குலம் | 80 | 1500 |
| 8. | தொட்டி | 25 லிட்டர் | 1 | 1500 |
| 9. | கார அமில நிறங்காட்டி | | 1 | 250 |
| 10. | விதைகள் | | | 1000 |
| மொத்தம் | | | | 30000 |

**செங்குத்து தோட்டம் அமைப்பதற்கான வரையறைகள் (Specifications):**

**செங்குத்து தோட்டத்தின் அளவு – 40 ச.அடி ( ஒரு சதுர அடிக்கு ரூ.750 வீதம் )**

| வ. எண் | பொருள் | விவரக் குறிப்பு | உத்தேச தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | கட்டமைப்பு (Panel) | **MS பிரேம் அளவு :**<br>**செங்குத்து தட்டை :**<br>அளவு - அகலம் 25 மி.மீ. ,<br>தடிமன் 3 மி.மீ.<br>இடைவெளி: 30 செ.மீ.<br>**கிடைமட்ட கம்பி:**<br>அளவு - விட்டம் 3 மி.மீ.<br>இடைவெளி: 15 செ.மீ.<br>தூள்பூசப்பட்ட ஸ்க்ரு அளவு -6 மி.மீ | 10,000/- |
| 2. | பி.வி.சி தொட்டிகள் | தொட்டியின் நீளம் - 30 செ.மீ., அகலம் - 15 செ.மீ.<br>தொட்டிகளின் எண்ணிக்கை - 80 | 6,000/- |
| 3. | ஜியோ டெக்ஸ்டைல் பேப்ரிக் | 160 GSM நைலான் பின்னப்பட்ட ஜியோடெக்ஸ்டைல் வடித்துணி | 400/- |
| 4. | வளர்ப்பு ஊடகம் | மண்ணற்ற ஊடகக் கலவை (80% தேங்காய் நார் கழிவு, 10% செம்மண், 5% மண்புழு உரம், 5% பெரிலைட் (<0.5 மின்கடத்துத் திறன்), தேவையான அளவு இயற்கை உரம் மற்றும் இயற்கை மருந்து) | 8,600/- |
| 5. | விதைகள்/செடிகள் | கீரைகள், கொத்தமல்லி, முள்ளங்கி, வெங்காயம், புதினா போன்றவற்றின் விதைகள் மற்றும் நடவுச்செடிகள் | 3,000/- |

| | | | |
|---|---|---|---|
| 6. | சொட்டு நீர் பாசன அமைப்பு | 16 மிமீ விட்டம் கொண்ட HDPE குழாய் மற்றும் 8 LPH இன்லைன் அல்லது ஆன்லைன் உமிழ்ப்பான் | 2,000/- |
| | | **மொத்தம்** | **30,000/-** |

**ஆ) பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் வளர்ப்பு**

**i) பசுமைகுடில் - ரூ. 29.92 இலட்சம்**

- 50% பின்னேற்பு மானியத்திற்கான விவர அட்டவணை பின்வருமாறு, சொட்டுநீர் பாசன அமைப்பு அவசியம்.

| வ. எண் | விவரம் | அலகு விலை (ரூபாய் சதுர மீட்டருக்கு) | மானிய விலை (ரூபாய் சதுர மீட்டருக்கு) |
|---|---|---|---|
| 1 | பசுமைக் குடில்கள் (இயற்கையாக காற்றோட்ட அமைப்பு/ குழாய் அமைப்பு)<br>அலகு: ச.மீ | | |
| | 1. 500 வரை | 1060 | 530 |
| | 2. 500 to 1008 | 935 | 467.5 |
| | 3. 1008 to 2080 | 890 | 445 |
| | 4. 2080 to 4000 | 844 | 422 |

- ஆதிதிராவிட, பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு 20 சதவீத கூடுதல் மானியம் வழங்கப்படும்.
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 4000 ச.மீ. வழங்கப்படும்.

**ii) நிழல் வலை குடில் (குழாய் அமைப்பு) - ரூ. 61.06 இலட்சம்**

- 50 % பின்னேற்பு மானியத்தொகை – ரூ. 355 /ச.மீ. வழங்கப்படும்.
- ஆதிதிராவிட, பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு 20 சதவீத கூடுதல் மானியம் வழங்கப்படும்.
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 4000 ச.மீ. வழங்கப்படும்.

| வ. எண் | விவரங்கள் | அளவு |
|---|---|---|
| 1 | நிழல் வலைக் குடிலுக்கான பரப்பு (தரை மட்டம்) | 500-4000 ச.மீ |
| 2 | முதன்மை கம்பிகள் மற்றும் கட்டமைப்புகள் | 60 மி.மீ G.I குழாய் |
| 3 | நீளம் மற்றும் அகலம் | 48 மி.மீ G.I குழாய் |
| 4 | நீளம் | 42 மி.மீ G.I குழாய் |
| 5 | நிழல் வலை தன்மை | 50% நிழல் |
| 6 | சொட்டு நீர் பாசனம் / மூடுபனி / பனித்துளி அமைப்பு | ஆம் |

**3. வீட்டுத்தோட்டம் அமைப்பதை ஊக்குவித்தல் - ரூ. 487.500 இலட்சம்**

**அ) மாடித்தோட்டத் தளைகள் விநியோகம் - ரூ. 112.50 இலட்சம்**

**செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் (நீலகிரி தவிர)

[த.பி.பா]

- திட்ட ஆவணங்கள்: ஏதேனும் ஒன்று (அடையாள அட்டை/ முகவரி ஆதாரம்/ ஆதார் அட்டை) மற்றும் பயனாளியின் புகைப்படம் (18 வயதிற்கு மேல்)
- ஒவ்வொரு தொகுப்பிலும் பின்வரும் இடுபொருட்கள் இருக்க வேண்டும்.

| வ. எண் | இடுபொருட்கள்* | அளவு |
|---|---|---|
| 1 | செடி வளர்ப்புப் பைகள் | 6 எண்கள் |
| 2 | 2 கிலோ தென்னை நார்கழிவு / மக்கிய கரும்புச்சக்கை கட்டிகள் | 6 எண்கள் |
| 3 | 6 வகையான காய்கறி விதைகள் (அதிக மகசூல் தரும் வீரிய ஒட்டு இரகம் மற்றும் பாரம்பரிய வகைகள்) (அரசு நிறுவனம் மூலம்) | 6 விதை பொட்டலங்கள் |
| 4 | அசோஸ்பைரில்லம் (அரசு நிறுவனம் மூலம்) | 200 மில்லி |
| 5 | பாஸ்போபாக்டீரியா (அரசு நிறுவனம் மூலம்) | 200 மில்லி |
| 6 | டிரைகோடெர்மா விரிடி (அரசு நிறுவனம் மூலம்) | 200 கிராம் |
| 7 | வேப்பெண்ணெய் மருந்து | 100 மில்லி |
| 8 | மாடித் தோட்ட காய்கறி வளர்ப்புக்கான கையேடு | 1 எண் |

*போக்குவரத்து செலவு உட்பட

- ஒரு தொகுப்பின் மொத்த விலை - ரூ.900/-
- 50 சதவீத மானியம் - ரூ.450, பயனாளியின் பங்குத்தொகை - ரூ.450/-
- ஒரு பயனாளி அதிகபட்சமாக இரண்டு தொகுப்புகள் வரை பெறமுடியும்.

<u>ஆ) பழச்செடி தொகுப்புகள் விநியோகம்- ரூ.375.000 இலட்சம்</u>

கொய்யா, நெல்லி, சீத்தா, எலுமிச்சை மற்றும் பலா/மா போன்ற 5 வகை பழச்செடிகள் அடங்கிய 2,50,000 தொகுப்புகள் ரூ 375.000 இலட்சம் நிதியில் வழங்கப்படும்.

i. கொய்யா, நெல்லி, பலா/மா, சீத்தா, எலுமிச்சை போன்ற 5 வகையான பழச்செடிகள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும்.
ii. தொகுப்பு ஒன்றின் மொத்த விலை - ரூ.200/- (போக்குவரத்து செலவு உட்பட)
iii. தொகுப்பு ஒன்றிற்கு 75 சதவீத மானியமாக ரூ.150/-
iv. தொகுப்பு ஒன்றிற்கு 25 சதவீத பயனாளியின் பங்குத் தொகை ரூ.50/-
v. பயனாளிகளை உடனடியாக தேர்வு செய்து அவர்களின் இடவசதியினை ஆய்வு செய்து, மாவட்ட அலுவலரின் பரிந்துரையுடன் அறிக்கை பெற்ற பின், பரிசீலிக்கப்பட்டு இடவசதிக்கேற்ப ஒரு தொகுப்பினை இரண்டாக பிரித்து 2 அல்லது 3 பழச்செடிகள்

[த.பி.பா]

(ரூ.100/- மதிப்பில்) அடங்கிய சிறு தொகுப்பாக வழங்கிட உரிய அறிவுரைகள் வழங்கப்படும்.

vi. வீட்டின் புறப்பகுதிகளில் போதிய இடவசதி இல்லாத பட்சத்தில் வழங்கப்படும் பழச்செடிகளை பயனாளிகளின் வயல்களிலும் நட்டு பராமரிக்கலாம்.

vii. ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ஒரு பழச்செடி தொகுப்பு மட்டுமே வழங்கப்படும்.

viii. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களுக்கு முன்னுரிமை அளித்து பழச்செடி தொகுப்புகள் விநியோகிக்கப்பட வேண்டும்.

ix. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

x. இவ்வினத்திற்கு தேவையான பழச்செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

xi. தொகுப்புகள் முறையாக வழங்கப்படுவதை வட்டார அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

xii. தொகுப்புகள் வழங்கப்பட்ட பின், உதவி தோட்டக்கலை அலுவலர் வாரம் ஒருமுறையும், தோட்டக்கலை அலுவலர் 15 நாட்களுக்கு ஒருமுறையும், தோட்டக்கலை உதவி இயக்குநர் மாதம் ஒருமுறையும் நேரில் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட தோட்டக்கலை இணை/துணை இயக்குநருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். தோட்டக்கலை இணை/துணை இயக்குநர்கள் குறைந்தபட்சம் 10 சதவீத பயனாளிகளை நேரில் சென்று பார்வையிட வேண்டும்.

## 4. தேவை அடிப்படையிலான திட்ட இனங்கள்

### அ) வாழை/மரவள்ளியில் ஊடுபயிராக காய்கறிகள்- ரூ. 200.00 இலட்சம்

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை மற்றும் நீலகிரி தவிர)
- மானியம் - ரூ. 10,000/எக்டர்
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும்.

| வ. எண் | இனத்தின் பெயர் | மானியம் (ரூ. / எக்டர்) |
|---|---|---|
| 1 | காய்கறி விதைகள் | 6,000 |
| 2 | ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மை | 2,000 |
| 3 | நிலம் தயாரித்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் & பயிர்சாகுபடிக்கு இடையேயான நடைமுறைகள் | 2,000 |
| | **மொத்தம்** | **10,000** |

[த.பி.பா]

ஆ) பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களில் காய்கறிகள் ஊடுபயிர் சாகுபடி – ரூ.400.00 இலட்சம்

- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை தவிர)
- மானியம் - ரூ. 10,000/எக்டர்
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும்

| வ. எண் | இனத்தின் பெயர் | மானியம் (ரூ. / எக்டர்) |
|---|---|---|
| 1 | காய்கறி விதைகள் | 6,000 |
| 2 | ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மை | 2,000 |
| 3 | நிலம் தயாரித்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் & பயிர்சாகுபடிக்கு இடையேயான நடைமுறைகள் | 2,000 |
| | மொத்தம் | 10,000 |

இ) வெற்றிலையில் ஒருங்கிணைந்த உர மற்றும் பயிர் பாதுகாப்பு மேலாண்மை - ரூ.30.00 இலட்சம்

- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: அனைத்து வெற்றிலை பயிரிடும் விவசாயிகளும் தகுதி பெறுவர்.
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 எக்டருக்கு மானியம் வழங்கப்படும்
- ஒரு விவசாயிக்கு உதவித் தொகை பின்னேற்பு மானியமாக ஒரு எக்டருக்கு ரூ.10,000 வழங்கப்படும்.

ஈ) நெகிழிக் கூடைகள் விநியோகம் (10 எண்கள் / அலகு - ரூ.75.00 இலட்சம்)

- மொத்த விலை – ரூ. 7,500/அலகு
- 40 சதவீத மானியம் – ரூ. 3,000/ அலகு
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 அலகு மட்டுமே வழங்கப்படும்

உ) குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிடங்குகள் அமைத்தல்- ரூ.87.50 இலட்சம்

- மொத்த விலை – ரூ. 7,000/மெ.டன்
- 50 சதவீத மானியம் – ரூ. 3,500/மெ.டன்
- விவசாயியின் தேவைக்கேற்ப 5 மெ.டன் முதல் 25 மெ.டன் வரை வழங்கப்படும்.

5. கூடுதல் வருமானம் ஈட்டும் சிறு தொழில்கள் - ரூ. 125.00 இலட்சம்

காளான் வளர்ப்பு கூடம்

- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள்
- ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 1 அலகு மட்டும் வழங்கப்படும்
- மொத்த விலை – ரூ.1 இலட்சம்/ அலகு
- 50 சதவீத மானியம் – ரூ.50,000/ அலகு/ பயனாளி

[த.பி.பா]

| வ. எண் | விவரங்கள் (தேசிய தோட்டக்கலை இயக்க வழிமுறைகளின் படி) | தொகை (ரூ.) |
|---|---|---|
| அ | **ஆரம்ப கட்ட முதலீடு** | |
| 1 | கட்டுமான விலை: காளான் ஓலைக் கொட்டகை (600 ச.அடி) | 63,000 |
| 2 | தெளிப்பான் (1 எண்) | 3,000 |
| 3 | வெப்பமானி | 1000 |
| | **மொத்தம் (அ)** | **67,000** |
| ஆ | **தொடர் செலவு** | |
| 4 | வைக்கோல் (100 கி.கி) – ரூ.5/ கி.கி | 5,000 |
| 5 | நெகிழிப் பையின் விலை - ரூ.200/கி.கி | 2,000 |
| 6 | காளான் விதை விலை – ரூ.70.00/கி.கி (80 கி.கி) | 5,600 |
| 7 | கூலித்தொகையாக நாள் ஒன்றுக்கு ரூ.300 வீதம் 2 நபருக்கு (10 நாட்கள்) | 6,000 |
| 8 | கிருமி நாசினி மருந்துகள் | 3,000 |
| 9 | இதர செலவு (மின்சாரம், பைகள், கயிறு, அலமாரிகள், போன்றவை) | 11,400 |
| | **மொத்தம் (ஆ)** | **33,000** |
| | **ஆக மொத்தம் (அ + ஆ)** | **1,00,000** |

மேற்கண்ட செலவு சிப்பி காளான் வளர்ப்புக்காக ஆகும். மேலும், பட்டன் காளான் வளர்ப்பதை ஊக்குவிக்கவும் இதே இனங்களை பயன்படுத்தலாம். இருப்பினும், ஒரு அலகிற்கு அதிகபட்ச மானியம் ரூ.50,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். விவசாயிகளின் தேவை, பயிரிடப்படும் காளான் வகை, பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் சந்தை விலை நிலவரம் ஆகியவற்றின் அடிப்படையில் இனங்கள் மற்றும் தனிப்பட்ட செலவுகள் மாறுபடும்.

சம்மந்தப்பட்ட தோட்டக்கலை இணை/ துணை இயக்குநரை தலைவராகக் கொண்ட கூட்டு ஆய்வுக் குழு, சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை அலுவலர் மற்றும் மற்ற வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆகியோர் தொகை வழங்கும் முன் கட்டமைப்பை கூட்டாய்வு செய்து சரிபார்க்க வேண்டும்.

6. **<u>அரசு கல்வி நிலையங்கள் மற்றும் ஆதரவற்றோர் காப்பகங்களில் தோட்டம் அமைத்தல் - ரூ. 24.00 இலட்சம்</u>**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள்
- 100 சதவீத மானியம் – ரூ. 8,000/-
- பரப்பு – குறைந்தபட்சம் 5 சென்ட்

- வேலி பாதுகாப்பு மற்றும் தண்ணீர் வசதி உள்ள இடங்களில் மட்டுமே தோட்டம் அமைத்தல் வேண்டும். உதவி தோட்டக்கலை அலுவலர் இடத்தினை தேர்வு செய்து, தோட்டக்கலை உதவி இயக்குநர் அதனை சரிபார்த்த பின்னர் தோட்டம் அமைத்தல் வேண்டும்.
- தோட்டம் அமைத்த பின்பு வாரம் ஒருமுறை உதவி தோட்டக்கலை அலுவலர் தோட்டத்தினை பார்வையிட்டு அதன் நிலை குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். (இரண்டு ஆண்டு வரை)
- தோட்டக்கலை அலுவலர் 15 நாட்களுக்கு ஒருமுறையும், தோட்டக்கலை உதவி இயக்குநர் மாதம் ஒருமுறையும் நேரில் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

தோட்டத்தில் பின்வரும் இனங்கள் இருக்க வேண்டும்.

| வ.எண் | இனங்கள் | அளவு (எண்கள்) | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | பழச்செடிகள் – மா நெருக்கு ஒட்டு (2 எண்கள்), சப்போட்டா ஒட்டு (2 எண்கள்), நெல்லி ஒட்டு (1 எண்), எலுமிச்சை பதியன் (2 எண்கள்), கொய்யா பதியன் (2 எண்கள்), வாழை கன்றுகள் (5 எண்கள்), பப்பாளி விதைக்கன்றுகள் (5 எண்கள்) மற்றும் தென்னங்கன்றுகள் (3 எண்கள்) | | 760 |
| 2. | அதிக மகசூல் தரும் விதைகள் (முருங்கை, முள்ளங்கி மற்றும் கீரைகள் கட்டாயம்) – 4 தொகுப்புகள் | 10 வகை விதைகள் -ரூ.25/பொட்டலம் | 1000 |
| 3. | மூலிகை (துளசி, கற்பூரவல்லி, கற்றாழை, புதினா, பிரண்டை, வெட்டிவேர் முதலியவை) மற்றும் பிற செடிகள் (கறிவேப்பிலை) | 30 | 300 |
| 4 | குழியெடுத்தல், நடவு செய்தல் | | 800 |
| 5 | தொழு உரம் (25 கிலோ) , மண்புழு உரம் (20 கிலோ), அசோஸ்பைரில்லம் (1 லி.), பாஸ்போ பாக்டீரியா (1லி.), டிரைகோடெர்மா விரிடி (600 கிராம்) | | 1,140 |

| வ.எண் | இனங்கள் | அளவு (எண்கள்) | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 6 | <u>கருவிகள் மற்றும் உபகரணங்கள்</u><br>களை வெட்டி (Hand Hoe) (2 எண்கள்), மண்வெட்டி (2 எண்கள்), பூவாளி (1 எண்), கார்டன் ரேக் (2 எண்கள்), கவாத்து கத்தரி – 2 எண் முதலியவை. | | 3,000 |
| 7 | ஆவணப்படுத்துதல் | | 1,000 |
| | **மொத்தம்** | | **8,000** |

- தோட்டக்கலை இணை/துணை இயக்குநர், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், அரசு கல்வி நிலையங்கள் மற்றும் ஆதரவற்றோர் காப்பக பொறுப்பு நபர் அடங்கிய குழு, தரநிலையின்படி நிறுவப்பட்ட தோட்டத்தை ஆய்வு செய்து சான்றளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு நிலையிலும் கட்டாயமாக ஆவணப்படுத்த வேண்டும்.

## 7. <u>தொகுப்பு முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கான இயக்கம்</u>

மல்லிகை, கறிவேப்பிலை, மிளகாய், பலா போன்ற தோட்டக்கலை பயிர்கள் அதிகம் பயிரிடப்படும் மாவட்டங்களில் இதற்கென தனி தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்டு, சாகுபடி முதல் அறுவடை பின்சார் மேலாண்மை உட்பட ஏற்றுமதி வரை அனைத்து நிலைகளிலும் கவனம் செலுத்தி ஒட்டுமொத்த வளர்ச்சி அடையும் நோக்கில் தொகுப்பு முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்தொகுப்புகள் மூலம் விளையும் விளைபொருட்களுக்கு தனி அடையாளத்தை உருவாக்கி, இந்திய மற்றும் உலகளாவிய மதிப்புத் தொடர்களில் நமது விவசாயிகளை ஒருங்கிணைத்து, அவர்கள் அதிக வருமானம் பெற்று வாழ்க்கைத் தரம் உயரும் நோக்கில் திட்டம் செயல்படுத்தப்படும்.

மேலும் இத்திட்டம் தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் மற்றும் மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின் கூறுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

### <u>அ) கறிவேப்பிலைத் தொகுப்பு</u>

தமிழ்நாட்டில் அதிக அளவில் கறிவேப்பிலை பயிரிடப்படும் மாவட்டமான கோயம்புத்தூரில் கறிவேப்பிலைக்கென ஒரு தொகுப்பு உருவாக்கப்பட்டு, இங்கு பூச்சி கொல்லி மருந்துகளின் பயன்பாட்டை குறைத்து அதிக அளவில் அங்கக

[த.பி.பா]

இடுபொருட்களை பயன்படுத்தி, உரிய பயிர் பாதுகாப்பு முறையினை கடைபிடிக்க தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும். இத்திட்டம் மூன்றாண்டுகளில் 1500 எக்டரில் செயல்படுத்தப்படும்.

இவ்வாண்டு, உயர் இரக கறிவேப்பிலை பயிரிட தரமான நடவுச்செடிகள், நுண்ணீர் பாசன அமைப்புகள் வழங்குவதோடு, கறிவேப்பிலை செடிகளை கவாத்து செய்து, அங்கக உரமிட்டு உற்பத்தி திறனை பெருக்கவும் தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தில் பின்வரும் இனம் மேற்கொள்ளப்படும்.

<u>கறிவேப்பிலையில் இரசாயன எச்சம் பரிசோதித்தல் - ரூ. 7.50 இலட்சம்</u>

- செயல்படுத்தப்படும் மாவட்டம்: கோயம்புத்தூர்
- அறுவடைசெய்யப்படும் கறிவேப்பிலையில் இரசாயன எச்சம் பரிசோதிக்க, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பரிசோதனை மையம்/ அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்களுக்கு மாதிரிகள் அனுப்பப்படும். இவ்வாறு அனுப்பப்படும் மாதிரி ஒன்றுக்கு பரிசோதனை கட்டணமாக ரூ. 5000/- நூறு சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

ஆ) <u>மல்லிகைத் தொகுப்பு - ரூ. 34.95 இலட்சம்</u>

- இத்தொகுப்பில் மல்லிகை உற்பத்தியையும், தரத்தையும் மேம்படுத்துவதோடு, சந்தை வாய்ப்புகளும் மேம்படுத்தப்படும். குறிப்பாக பருவமில்லா காலங்களில் உற்பத்தி ஊக்குவிக்கப்படும். இத்திட்டம் தொடர் திட்டமாக மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்படும்.
- இத்தொகுப்பு திட்டம் தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் மற்றும் மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின் கூறுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.
- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: மதுரை, விருதுநகர், திண்டுக்கல், தேனி, தென்காசி
- பருவத்திற்கு ஏற்றவாறு மல்லிகை செடியினை பராமரிக்க கவாத்து கத்தரிகள், பூச்சிகளை கட்டுப்படுத்த விளக்குப்பொறிகள் போன்றவை வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் (SMAM) மூலம் பெற்று வழங்கப்படும்.
- பூக்களை அறுவடை செய்து எடுத்துச் செல்ல 10 நெகிழிக் கூடைகள் அடங்கிய 500 அலகுகள் இத்திட்ட இனம் 4(ஈ) -ல் இருந்து வழங்கப்படும்.
- அறுவடை செய்த பூக்களை தரம் குறையாமல் சந்தைகளுக்கு கொண்டுசெல்ல குளிர்ப்பெட்டிகள் பின்வரும் மானியத்தில் வழங்கப்படும்.

| வ. எண் | இனங்கள் | அலகு விலை | மானியம் % | ஒரு அலகிற்கான மானிய விலை | மானிய வரம்பு |
|---|---|---|---|---|---|
| 1 | குளிர்ப்பெட்டிகள் | 5,000 | 40% | 2,000 | 2 எண்கள் / விவசாயி |

- **விவசாயிகள் வயல்களில் செயல்விளக்கத்திடல் அமைத்தல் (விருதுநகர்) :**
    - பரப்பு - 0.50 ஏக்கர்/ திடல்
    - மொத்த செலவினம் – ரூ.2.20 இலட்சம்
    - மானியம் - ரூ.1.65 இலட்சம் (75 சதவீதம்)
- **அரசு தோட்டக்கலைப்பண்ணையில் செயல்விளக்கத்திடல் அமைத்தல் (விருதுநகர்) :**
    - பரப்பு - 2.50 ஏக்கர்/ திடல்
    - மொத்த செலவினம் – ரூ.10.00 இலட்சம்
    - மானியம் - ரூ.10.00 இலட்சம் (100 சதவீதம்)

**இ) மிளகாய் மண்டலம்- ரூ. 43.70 இலட்சம்**

மிளகாய் சாகுபடி பரப்பினை அதிகரித்து, உற்பத்தி மற்றும் தரத்தினை உயர்த்திட, **இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி** ஆகிய மாவட்டங்களை ஒருங்கிணைத்து மிளகாய் மண்டலமாக ஐந்தாண்டுகளில் மாற்றப்படும். மேலும், சேமிப்பு மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

- வேலிக் கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடி: விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வேலிக் கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடியினை ஊக்குவிக்க ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக இரண்டு எக்டர் வீதம், கருவேல மரங்களை அகற்ற எக்டர் ஒன்றுக்கு 50 சதவீத மானியமாக ரூ.5,000/- வழங்கப்படும்.
- **உலர் பாய்கள் :**
    - மொத்த விலை – ரூ. 6,000/ எண் (30 * 25 அடி laminated HDPE sheet, 200 GSM)
    - மானியம் - ரூ.3,000/- எண் (50 சதவீதம்)
    - அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 1 எண் வழங்கப்படும்.
- **விவசாயிகள் வயல்களில் செயல்விளக்கத்திடல் அமைத்தல் (விருதுநகர் மற்றும் தூத்துக்குடி) :**
    - பரப்பு - 1 ஏக்கர்/ திடல்
    - மொத்த செலவினம் – ரூ.2.32 இலட்சம்
    - மானியம் - ரூ.1.74 இலட்சம் (75 சதவீதம்)

ஈ) முருங்கை தொகுப்பு - ரூ. 27.50 இலட்சம் (கரூர் மற்றும் தூத்துக்குடி):

- அங்கக வேளாண்மையை ஊக்குவிக்க உதவித்தொகை - எக்டர் ஒன்றுக்கு ரூ.4000/- (முதலாமாண்டு)
- அங்கக சான்றிதழ் பெறுவதற்கான தொகை - முதலாமாண்டு எக்டர் ஒன்றுக்கு ரூ.3000/- வீதம் வழங்கப்படும்.
- சிப்பம் கட்டும் அறை (600 ச.அடி) – ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்.

8. விருதுகள் வழங்குதல் – ரூ.11.250 இலட்சம்

**அ) பாரம்பரிய காய்கறிகள் சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு விருது வழங்குதல் (மாவட்ட அளவில்)**

பாரம்பரிய காய்கறிகள் சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் 2023-2024 ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் சிறந்த விவசாயிகளைத் தேர்வு செய்து சான்றிதழுடன் முதலாம் பரிசாக ரூ-15,000/-ம் இரண்டாம் பரிசாக ரூ-10,000/-ம் சென்னை நீங்கலாக 37 மாவட்டங்களில் வழங்கப்படும்.

விவசாயிகள் 1. அதிக பாரம்பரிய காய்கறிகள் இரகங்களை மீட்டெடுத்தல், 2. பிற விவசாயிகளிடம் பாரம்பரிய காய்கறி விதைகளை கொண்டு சேர்த்தல், 3. நீர் மேலாண்மை, 4. முறையான மண்வள மேம்பாடு, 5. அங்கக முறையில் விதைகளை மீட்டெடுத்தல் ஆகிய காரணிகளின் அடிப்படையில் மாவட்ட அளவிலான நிபுணர் குழுவின் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.

**ஆ) அங்கக வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிக்கான விருது வழங்குதல் (மாநில அளவில்)**

அங்கக வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் 2023-2024 ஆம் ஆண்டில் மாநில அளவில் சிறந்த விவசாயிகளைத் தேர்வு செய்து ரூ. 2,00,000/-, (முதல் பரிசு – ரூ.1,00,000/-, இரண்டாம் பரிசு ரூ.60,000/-, மூன்றாம் பரிசு ரூ.40,000/-) பரிசு வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் தகுதி மற்றும் முறை

- அங்கக வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிக்கான விருதுக்கு தமிழ்நாட்டில் வசிக்கும் சொந்த நிலம் வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளும் விண்ணப்பிக்கலாம். மேலும், பாரம்பரிய காய்கறிகள் சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கான விருதுக்கு சொந்த/குத்தகை நிலத்தில் பாரம்பரிய காய்கறிகள் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் விண்ணப்பிக்கலாம்
- விண்ணப்ப படிவம், துறை இணையதளம் www.tnhorticulture.tn.gov.in மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகங்களில் கிடைக்கும்.

[த.பி.பா]

விவசாயிகள் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வட்டார/மாவட்ட தோட்டக்கலை அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

**தேர்வு செய்யும் முறை**

- மாவட்ட ஆட்சியர், தோட்டக்கலை இணை/துணை இயக்குநர், மாவட்ட ஆட்சியர் அலுவலக நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆகியோர் அடங்கிய மாவட்ட அளவிலான தேர்வுக்குழு, மாவட்ட அளவிலான விருது பெறும் விவசாயிகளை ஆய்வு செய்து தேர்ந்தெடுக்கும்.
- மாவட்ட அளவிலான விருது வென்றவர்கள் மாவட்ட ஆட்சியரால் அறிவிக்கப்படுவார்கள். அரசு நிகழ்ச்சி/ விழாக்களின் போது சான்றிதழ்களுடன் வங்கி வரைவோலையாக (DD) விருது வழங்கப்படும்.
- மாவட்ட அளவிலான நிபுணர் குழுவினால் தேர்வு செய்யப்படும் விவசாயிகளுள் சிறந்த விவசாயியை அங்கக வேளாண்மை மற்றும் விதை சான்றளிப்புத்துறை இயக்குநர், தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் (ம.மா.தி), வேளாண் இணை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் ஆகியோர் அடங்கிய குழுவால் தேர்வு செய்யப்படுவர்.

9. **ஆவணப்படுத்துதல்**

- திட்ட அடிப்படையிலான உட்கட்டமைப்பிற்கு மாவட்ட அலுவலர்களால் கையேடு பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் பணியின் பல்வேறு நிலைகள் பதிவு செய்யப்பட வேண்டும்.
- அனைத்து நிலைகளிலும் விவசாயிகளின் மகசூல் மற்றும் வருமானத்தைப் பதிவு செய்து ஒவ்வொரு வட்டார அளவிலும் திட்ட இன வாரியாக சாதனைகள் பராமரிக்கப்பட்டு, அதன் விவரங்கள் இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
- பயனாளிகள் வாரியாக பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் மகசூல், ஈட்டப்பட்ட வருமானம் போன்றவை மற்றும் பிற அளவுருக்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.
- விவசாயி வயலின் முன் காட்சிப் பலகை வைக்க வேண்டும். தமிழ்நாடு அரசின் சின்னம் மற்றும் SHDS ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் வடிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.
- திட்டம் குறித்த விபரப்பலகை அமைத்த பிறகு, பயனாளி விவசாயியுடன் புகைப்படம் எடுக்கப்பட்டு தொடர்நடவடிக்கை பதிவேட்டில் ஒட்டப்பட வேண்டும்.

உயர் மதிப்பிலான இனங்களுக்கு வைக்கவேண்டிய நிரந்தர விளம்பர பலகை

(4' * 3' அடி)

## தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை
## நிதி உதவி - SHDS – 2023-24

தமிழ் நாடு அரசு
வாய்மையே வெல்லும்

| | |
|---|---|
| விவசாயி பெயர்: | திட்ட இனம்: |
| த/பெ / க/பெ: | பரப்பு: |
| கிராமம்/சர்வே எண்: | மதிப்பு: ரூ. |
| வட்டாரம்/மாவட்டம்: | அரசு உதவித்தொகை: ரூ. |

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

**/உண்மை நகல்/**

16/05/2023
**பிரிவு அலுவலர்**